மோசமான நீர் மேலாண்மை!

வானம் பார்த்த பூமியான காவிரி டெல்டா!

கால் நூற்றாண்டு காலத்தில் இது போன்ற ஒரு நிலைமையை காவிரி டெல்டாவில் வாழும் தலைமுறை பார்த்ததேயில்லை. கடந்த 5 ஆண்டுகளில் சாதனை அளவிலான நெல் அறுவடையைக் கண்ட டெல்டா மாவட்டங்கள் இந்த ஆண்டு வானம் பார்த்த பூமி போல வறண்டு கிடக்கின்றன. வடகிழக்குப் பருவ மழை முறையாகவும், சரியாகவும் பெய்தால் மட்டுமே சம்பா மற்றும் தாளடி பருவ நெற்பயிர்கள் விளையும். குறுவைப் பயிர் ஏற்க னவே கைவிரித்துவிட்டது என்று வேதனையுடன் சொல்கி றார்கள் டெல்டா விவசாயிகள்.

ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் நாள் டெல்டாவின் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையைத் திறப்பது வழக்கம். கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சி யில், உரிய நேரத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட்டது. அதற்கு முன்பாகவே, ஆறுகளும் வாய்க்கால்களும் தூர் வாரப்பட்டதால், மேட்டூரிலிருந்து கல்லணைக்கு வரும் காவிரி நீர் தஞ்சை மாவட்டத்தில் தொடங்கி, டெல்டாவின் கடைமடைப் பகுதியான புதுச்சேரியின் காரைக்கால் மாவட்டம் வரை ஓடியது. வயல்வெளிகள் செழித்தன. மேட்டூர் அணைத் திறப்பு முதல் நெல் அறுவடை வரை ஒவ்வொன்றிலும் தனிக்கவனம் செலுத்தினார் டெல்டா மாவட்டத்துக்காரரான கழகத் தலைவர்திராவிட நாயகர்.

அடுத்த பிறவியில் விவசாயியாகப் பிறக்க ஆசைப்படுகிறேன் என்று தஞ்சையில் தேர்தல் பிரச் சாரத்தில் உளறிய த.வெ.க தலைவர் விஜய் தலை மையில் ஆட்சி அமைந்தபிறகு, நீர்மேலாண்மை என் பதே சீரழிந்து கிடக்கிறது. ஜூன் மாதம் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை ஜூலை, ஆகஸ்ட் என ஏறத்தாழ 80 நாட்கள் கடந்து செப்டம்பர் 1ஆம் நாள் திறக்கப்பட்டது. விஜய்யின் வருகைக்காக சாலையோரத் தடுப்புகள் மற்றும் அலங்காரங்க ளுக்காக 5 கோடி ரூபாய் அரசாங்கப் பணம் செல வழிக்கப்பட்டது. அணையைத் திறந்து வைத்த விஜய், வழியில் ஒரு கிராமத்தில் உள்ள குடிசைக் குள் புகுந்து, மூதாட்டி ஒருவருக்கு கூலிங்கிளாஸ் மாட்டிவிட்டார் என ஊடகங்கள் புளகாங்கிதம் அடைந்தன. எல்லாம் சரி! மேட்டூர் தண்ணீர் காவிரி டெல்டாவில் பாய்ந்ததா?

காவிரியிலும் கிளை ஆறுகளிலும் ஓடிவரும் தண் ணீர், வாய்க்கால்கள் வழியே வயலுக்குப் பாய்ந்தால் தான் விவசாயம் செய்ய முடியும். "விநாடிக்கு 20ஆயிரம் கனஅடி தண்ணீரை மேட்டூர் அணையிலிருந்து விடுவிச் சாதான் வாய்க்காலிலும் வயலிலும் தண்ணீர் வரும். ஆனால், 15ஆயிரம் கன அடிக்கும் குறைவாத்தான் திறக் குறாங்க. பாசன வாய்க்கால்களில் போதுமான அளவு தண்ணீரே இல்லீங்க. அப்புறம் எப்படி வயலுக்கு தண்ணி பாய்ச்ச முடியும்? எப்படி பயிர் பண்ண முடியும்? எனக் கேட்கிறார்கள் திருவாரூர் மாவட்ட விவசாயிகள்.

ஜூன் முதல் ஆகஸ்ட் வரை அதிகளவில் பெய்யும் தென் மேற்கு பருவமழை இந்த ஆண்டு போதுமான அளவில் இல்லை என்பதால், கர்நாடக அணைகளில் தண்ணீர் இல்லை என்று அந்த மாநில அரசு கைவிரித்துவிட்டது. இது போன்ற தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் காலங்களில், முறைப்பாசனம் என்ற முறையில், ஆறுகளையும் பாசன வாய்க்கால்களையும் தேர்ந்தெடுத்து இரண்டு மூன்று நாட் கள் என்ற கால இடைவெளியில் சீராகத் தண்ணீர் பாய்வ தற்கு அரசாங்கம் வழி செய்யும். அந்த நீர்மேலாண்மை என்பது த.வெ.க ஆட்சியில் சீரழிந்துவிட்டது.

காவிரியில் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட் டுவதிலும் த.வெ.க அரசுக்கு அக்கறையேயில்லை. விஜய் கர்நாடகாவுக்குப் போனார். கொல்லூர் மூகாம் பிகை கோயிலில் வழிபட்டார். ஆனால், கர்நாடகத்தில் ஆட்சி செய்யும் தனது கூட்டணிக் கட்சியான காங்கி ரஸ் அரசிடம் தமிழ்நாட்டின் உரிமை குறித்து வலியு றுத்தவில்லை. காவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்காற்று ஆணையம், உச்சநீதிமன்றம் ஆகியவற் றிலும் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டிடும் வலிமை த.வெ.க அரசுக்கு இல்லை.

காவிரியில் தமிழ்நாட்டின் உரிமைக்காக அமைக்கப் பட்டதுதான் நடுவர் மன்றம். அதனை அமைப்பதில் முனைப்பாக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். தி.மு.க பங்கேற்றிருந்த தேசிய முன்னணி ஆட்சியில் தான் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி நடுவர் மன்றத்தை அமைத்தார் அப்போதைய பிரதமர் வி.பி.சிங் அவர்கள். நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பையும், இறுதித் தீர்ப் பையும் வழங்கியது. இறுதித் தீர்ப்பு வெளியானபோதும் கலைஞர்தான் முதலமைச்சராக இருந்தார். முழுமையான உரிமைக்காகத் தொடர்ந்து வழக்குகள் தொடுக்கப்பட்ட தன் விளைவாகத்தான் காவிரியில் தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டது.

தமிழ்நாடு போராடிப் பெற்ற உரிமையை மாற்றம் செய்ய வேண்டும் என கர்நாடகம் அண்மையில் உச்சநீதி மன்றத்தில் தெரிவித்துள்ளது. சர்வதேச ஆற்று நீர் ஒப்பந் தங்களை காலச்சூழலுக்கேற்ப மறுபரிசீலனை செய்யும் வாய்ப்புள்ளதாகவும், 1960ஆம் ஆண்டு சிந்து நதி நீர்



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடை யில் போடப்பட்ட ஒப்பந்தம், காஷ்மீரின் பெஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டில் கைவிடப்பட்டது என்ப தையும், இப்போது சிந்து நதி நீரை பாகிஸ்தானுக்கு இந் தியா தருவதில்லை என்றும் உச்சநீதிமன்றத்தில் சுட்டிக்காட்டி, "சூழ்நிலை மாற்றத்தைக் கருத்தில் கொண்டு காவிரி ஒப்பந்தத்தையும் மாற்றம் செய்ய வேண்டும் என்று கர்நாடக அரசு வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாட்டின் உயிர் ஆதாரமான காவிரி நீரில், கீழ் ஆயக்கட்டு மாநிலமான தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய உரிமையை மறுப்பதுடன், தமிழ்நாட்டை பாகிஸ்தானுடன் ஒப்பிட்டு வாதாடியிருக்கிறது கர்நா டக காங்கிரஸ் அரசு. தமிழ்நாட்டை ஆளும் விஜய் அரசு, காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையை நிலை நாட்டும் அக்கறையில்லாமலும், கர்நாடக காங்கிரஸ் அரசின் நிலைப்பாட்டைக் கண்டிக்காமலும் வாய் மூடிக் கிடக்கிறது. டெல்டா மாவட்டங்கள் வறண்டு, வானம் பார்த்துக் கிடக்கின்றன.

தண்ணீர் இல்லாத காரணத்தால், நேரடி நெல் விதைப்பு செய்யும் நிலைக்கு டெல்டா விவசாயிகள் தள் ளப்பட்டுள்ளனர். அதாவது, வழக்கமாக நாற்றங்காலில் தான் நெல் விதைப்பார்கள், ஒரு ஹெக்டேர் வயல் என் றால் அதில் ஏறத்தாழ 20 சென்ட் நிலம் நாற்றங்காலுக்குத் தேவைப்படும். நெல் ரகத்தைப் பொறுத்து, நாற்றுகள் வளரும். அதற்கேற்ப தண்ணீர் தேவைப்படும். நாற்றங் காலில் தண்ணீர் அதிகமாக இருக்க வேண்டிய நாட்க ளும் உண்டு. தண்ணீரைக் குறைக்க வேண்டிய நாட்க ளும் உண்டு. சரியான முறையில் நீர் மேலாண்மை இருந்தால்தான், நாற்றாங்காலில் நெல் விதைத்து, குறிப் பிட்ட நாட்களுக்குப் பிறகு, நாற்றுகளைப் பறித்து, வய லில் நட முடியும். அதன்பிறகே நெற்பயிர் வளர்ந்து, அறு வடைக்குத் தயாராகும்.

நேரடி நெல் விதைப்பு என்பது மிக மோசமான தண் ணீர்ப் பற்றாக்குறை காலத்தில் மட்டுமே டெல்டா மாவட் டங்களில் மேற்கொள்ளப்படும். 33 ஆண்டுகளுக்குப் பிறகு டெல்டா மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளது. 1993ஆம் ஆண்டு ஜெயலலிதாவின் ஆட்சி நடந்த போது, ஜெ.ஜெ.92 என்ற நெல்ரகம் அறிமுகப்படுத்தப்பட் டது. ஜெயலலிதாவின் பெயரைக் குறிக்கும் வகையில் இந்தப் பெயர் வைக்கப்பட்டது. இந்த நெல்ரகம் நல்ல விளைச்சல் தரும் என்றும், அரிசி பொங்கினால் மல்லி கைப் பூ போல இருக்கும் என்றெல்லாம் அதிகாரிகள் சொன்னார்கள்.

"பேரு வச்சியே, சோறு வச்சியா?" என்பது போல நெல்ரகத்துக்கு ஜெ.ஜெ.92 என்று ஜெயலலிதாவின் பெயரை வைத்தது அப்போதைய அ.தி.மு.க. அரசு. ஆனால், பருவமழையும் இல்லை. அணையிலும் தண் ணீர் இல்லை. வயல்கள் காய்ந்து கிடந்ததால் நாற்று விட முடியவில்லை. நேரடியாக நெல் விதைக்கும் முறையை ஜெயலலிதா அரசாங்கம் வலியுறுத்தியது. டெல்டா மாவட்ட விவசாயிகள் வேறு வழியின்றி, நேரடி நெல் விதைப்பை மேற்கொள்ள வேண்டியதா யிற்று. விளைச்சல் சரியாக இல்லை. பயிர் எது? களை எது? என்று தெரியாத வகையில் புல்லும் களை யும் நெல்லுடன் சேர்ந்து வளர்ந்தன. அறுவடையும் மோசமாக இருந்தது. அப்போதைய ஜெயலலிதா ஆட் சிக்குப் பிறகு, இப்போதைய விஜய் ஆட்சியில்தான் காவிரி டெல்டா விவசாயிகள் நேரடி நெல் விதைப்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடகிழக்குப் பருவ மழை தொடங்கியுள்ள நிலையில், அதன் தாக்கம் எப்படி இருக்கும் என்பதும், எல்நினோ எனும் பருவநிலை மாற்றத்தால் அதிகரிக்கும் வெப்பம் டெல்டா நெற்பயிரை என்ன செய்யும் என்றும் தெரியாமல் தவிக்கிறார்கள் விவசாயிகள். "பேஞ்சு கெடுக்கும். இல் லேன்னா காஞ்சு கெடுக்கும் என்று டெல்டாகாரர்கள் சொல்வது வழக்கம். மழை அதிகமாகப் பெய்தால் 10 இலட்சம் ஏக்கரில் உள்ள குறுவைப் பயிர் மூழ்காமல் காப் பாற்றப் படவேண்டும். மழை போதுமான அளவில் பெய் யாவிட்டாலும் பாதிப்புதான். நேரடி நெல்விதைப்பு செய் யப்படும் சம்பா பயிர்கள் நிலை இன்னும் மோசம்.

இயற்கை கொடுத்தாலும், கெடுத்தாலும் அதை டெல்டா விவசாயிகள் எதிர்கொண்டு விடுவார்கள். வாழ்வோ சாவோ தங்கள் நிலத்தை விட்டுப் போக மாட் டார்கள். அரசாங்கம் கைக்கொடுக்கும் என்பதுதான் அவர் களின் கடைசி நம்பிக்கை. த.வெ.க. ஆட்சியில் அந்த நம்பிக்கையையும் இழந்து வருகிறார்கள்.

வறட்சி நிவாரணத்தை அரசு வழங்கினால் மட்டுமே விவசாயிகளால் இழப்பை ஓரளவேனும் எதிர்கொள்ள முடியும். த.வெ.க அரசோ, குறுவைப் பயிர் இழப்புக்கான காப்பீட்டுத் தொகையையே இன்னும் சரியாக வழங்காத நிலையில், சம்பா பயிரைக் காப்பாற்ற என்ன செய்வது என்று தெரியாமல் விவசாயிகள் தவிக்கிறார்கள்.

ஒரு காலத்தில் வானம் பார்த்த பூமியாக இருந்த மாவட் டங்களைச் சேர்ந்த மக்கள், காவிரி டெல்டாவுக்கு வந்து தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். இப் போது, காவிரி டெல்டாவே வானம் பார்த்த பூமிபோல ஆகிவிட்டது. வயலில் தண்ணீர் இல்லாததால், உழவ னின் கண்ணீர் பெருக்கெடுக்கிறது.

பட்டிக்காடும் பட்டணமும்




பட்டிக்காடு : ஏன் தம்பி; ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.35க்கு வாங்கறது ஊழலுக்கான அச்சாரம் தான்னு தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பின் தலைவர் ஒரு பேட்டியிலே விளக்கமாகச் சொல்லி இருக்கிறாரே! படிச்சியா.

பட்டணம் : **ஆமாமய்யா; அதுமட்டுமா சொல்லி இருக்கிறார். 'செய்த தவறுகளை மறைத்து அரசியலாக திசை திருப்புகின்றனர்' அப்படின்னும் சொல்லி இருக்கிறார். கலக்க்ஷன் குமார்ன்னா சும்மாவா? 'பம்பர் ஹார் வஸ்டாம்' சொல்றாங்க.**

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(18.10.2026)



1. திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி அருகே செவிலியர் கடத்தி கொடூர கொலை, காட்டுப் பகுதியில் உடல் நிர்வாணமாக வீசிச் சென்ற கொடூரம் ....

2. விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே மாட்டுத் தொழுவம் அமைப்பது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் அம்மிக்கல்லை தலையில் போட்டு விவசாயி கொலை ...

3. சிவகங்கை அடுத்த புதுப்பட்டி கிராமத்தில் முன் விரோதம் காரணமாக மஞ்சுவிரட்டுக்கு காளையை அழைத்துச் சென்ற ரவுடி ஓட ஓட வெட்டி க்கொலை...

4. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே அக்கவுண்டா பள்ளி கிராமத்தில் தூங்கிக் கொண்டிருந்த மனைவியை அறிவாளால் வெட்டிக்கொலை செய்த கணவன்.....

5. கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே வாணியம்பாளையம் கிராமத்தில் உருட்டு கட்டையால் அடித்து மாணவர் படுகொலை ...

6. திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே சொத்துத் தகராறு காரணமாக மண்வெட்டியால் வெட்டி மூதாட்டி படுகொலை ....

7. ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி அருகே கீழ்வெண்பாக்கம் கிராமத்தில் முன்விரோதம் காரணமாக கூலித் தொழிலாளி சரமாரியாக வெட்டி படுகொலை ...

8. மயிலாடுதுறை மாவட்டம் இலுப்பூர் அருகே சொத்துக்காக கூலிப்படையை ஏவி தந்தையைக் கொலை செய்த மூன்று மகள்கள் சிக்கினர் ....




9. சென்னையை அடுத்த தாம்பரம் அருகே முன்விரோதம் காரணமாக ரவுடியை ஓட ஓட வெட்டிக் கொல்ல முயற்சி . நாட்டு வெடி குண்டு வீசியதால் பரபரப்பு ....

10. சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே தொடாவூரில் ரூபாய் ஒரு கோடி பணம் கேட்டு நெல் வியாபாரி காரில் கடத்தல் ...

11. சென்னை நந்தம்பாக்கத்தில் பெண்களின் படங்களை ஆபாசமாக சித்தரித்து இணைய தளங்களில் பரப்பிய வாலிபர் சிக்கினார்...

12. சென்னை அம்பத்தூர் அருகே 12 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த முதியவர் சிக்கினார் ...

13. விழுப்புரம் மாவட்டம் அய்யூர் அகரம் பகுதியில் வீட்டிற்கு வெளியே விளையா டிக்கொண்டிருந்த சிறுமியை கடத்த முயன்ற வடமாநில வாலிபர், சிறுமி கூச்சலிட்டு கத்தியதால் வட மாநில வாலிபர் சிக்கினார் ...



14. சென்னை காசிமேட்டில் அரசு குழந்தைகள் காப்பகத்தில் சிறுவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்த விடுதி வார்டன் சிக்கினார் ...

15. சென்னை குன்றத்தூர் அருகே பழந்தண் டலத்தில் குடும்பத் தகராறு காரணமாக விசாரிக்கச் சென்ற திருமுடிவாக்கம் சப்இன்ஸ்பெக்டருக்கு அடி உதை ...

16. தென்காசி அருகே ஆர்டர் செய்த டீ தாமதமானதால் ஆத்திரமடைந்த சப் இன்ஸ்பெக்டர் , டீக்கடைக்காரர் மீது சரமாரியாக தாக்குதல்...

17. குமாரி மாவட்டம் பத்மநாபபுரம் அருகே மிகப் பழமையான தேவாலயத்தில் பூட்டை உடைத்து நகை மற்றும் பணம் கொள்ளை ....

18. சென்னை மெரினா கடற்கரை சுற்றி பார்க்க வந்த கேரள மாநில வாலிபரிடம் , செல்போன் பறிப்பு, மெரினாவில் தொடரும் செல்போன் திருட்டு சம்பவங்களால் பரபரப்பு ...



19. சென்னை திருவொற்றியூரில் துணிக் கடையில் கடை உரிமையாளரை கத்தி முனையில் மிரட்டி பணம் மற்றும் துணிகள் கொள்ளையடித்த கும்பல்...

20. சென்னை மற்றும் புறநகர் பகுதியில் தொடரும் மின்வெட்டு, புது வண்ணாரப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சாலை மறியல் ....

21. சென்னையில் தீவிரமாகும் போதை பொருள் புழக்கம், மெத்தாம் பெட்டமின் போதை பொருள் பயன்படுத்திய கல்லூரி மாணவர்கள் ஐந்து பேர் சிக்கினர் ...

22. சென்னை மற்றும் புறநகர்களில் வெளுத்து வாங்கிய கனமழை, முன்னேற்பாடுகள் செய்யாததால் வெள்ளத்தில் மூழ்கிய சாலைகள் ....

23. சென்னை போரூர் அருகே நடைபெற்ற த.வெ.க. நிகழ்ச்சியில், அக்கட்சி நிர்வாகிகள் இடையே கடும் மோதல் . த.வெ.க.வினரின் மோதலை வீடியோ எடுத்த செய்தியாளர் மீது தாக்குதல் நடத்த முயன்ற த.வெ.க.வினர்.

24. கோவையில் குடிபோதையில் ஒருவர் அடித்துக் கொலை.

சகோதரர்களுக்கு வலைவீச்சு.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கும்முடிப்பூண்டி கி. வேணு
அக்டோபர் 20 (2023)



சிறுவயதிலேயே கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கிய இவர், கிளைச் செயலாளராகவும் – 1973 முதல் ஒன்றியச் செயலாளராக ஐந்து முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டச் செயலாளராக நான்கு முறையும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை, கும்மிடிபூண்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிவர்.

"கழகம் களம் அமைத்த நேரத்திலெல்லாம், அந்தக் களத்திலே முதல் அணியின் சிப்பாய்களில் ஒருவராக இருந்து தன்னை தீயாகத்தீயிலே புடம்போட்டு எடுத்துக் கொண்டவர் தம்பி வேணு" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

2021ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "கலைஞர் விருது" வழங்கிச் சிறப்பித்ததோடு, "தமிழ்நாட்டின் வட எல்லையான திருவள்ளூர் மாவட்டத்தில் கழகத்தைக் கட்டிக் காத்த தீரர் அருமைச் சகோதரர் கும்மிடிப்பூண்டி கி.வேணு எத்தகைய இடர் வரினும் எதிர்த்து நிற்கும் அஞ்சாத நெஞ்சுக்குச் சொந்தக்காரர். மிசா சிறைவாசத்தில் என்னோடும், கருப்புக் கொடி போராட்டத்தில் ஈடுபட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடும் சிறையில் வாடியவர் அவர்." என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்

தலைமைக் கழகம்
தி.மு.க.

பெருந்துறை அருகே

நர்சை கடத்தி பலாத்காரம் செய்து கொலை!

காணாமல்போன 5 நாளுக்குப் பிறகு சடலம் மீட்பு!

பெருந்துறை, அக். 20 –

பெருந்துறை அருகே காணாமல் போன நர்ஸ், பெருந்துறை அருகே நிர்வாண நிலையில் சடலமாக மீட் கப்பட்டார். அவரை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்து கொன்று நகை கொள்ளையடிக்கப் பட்டது குறித்து போலீசார் விசா ரணை நடத்தி வருகிறார்கள். ராமநா தபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதி யைச் சேர்ந்த ஒருவர், ஈரோடு மாவட் டம் விஜய மங்கலத்தில் உள்ள கறிக் கடையில் வேலை பார்த்து வருகி றார். இவருக்கு 26 வயது மதிக்கத் தக்க இளம்பெண்ணுடன் கடந்த ஓராண் டுக்கு முன்பு திருமணம் நடந்தது.

நர்சிங் படித்துள்ள இவர், பெருந் துறை அருகே பல்லகவுண்டன்பா ளையத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் கடந்த 3ம் தேதி நர்ஸாக பணியில் சேர்ந்துள்ளார். கணவன், மனைவி இருவரும் பல்ல கவுண்டன்பாளையத்தில் வீடு வாட கைக்கு எடுத்து தங்கி உள்ளனர். வழக்கம்போல் கடந்த 14ம் தேதி காலை பணிக்கு சென்ற நர்ஸ், அன்று இரவு வீடு திரும்பவில்லை. பல இடங்களில் தேடி பார்த்தும் அவர் கிடைக்காததால் கணவர் திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி காவல் நிலை யத்தில் புகார் அளித்தார். அதன்பே ரில் போலீசார் வழக்குப்பதிந்து அந்த நர்சை தேடி வந்தனர்.

இந்நிலையில், பல்லகவுண்டன் பாளையம் அருகே கோவை – சேலம் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள பகுதியில் சாலையோர மரத்தடியில் 17.10.2026 அன்று இரவு இளம்பெண்ணின் சடலம் நிர் வாணமாக அழுகிய நிலையில் கிடப் பதாக பெருந்துறை போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில், போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோத னைக்காக ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீசாரின் மெத்தனம்!

போலீசார் நடத்திய விசாரணை யில் சடலமாக மீட்கப்பட்டது கடந்த 14ம் தேதி காணாமல் போன நர்ஸ் தான் என தெரியவந்தது. இதுகு றித்து விஜயமங்கலம் அருகே கைக்கோளம்பாளையத்தில் உள்ள நர்சின் பெற்றோருக்கு தகவல் தெரி விக்கப்பட்டது. அவர்கள் வந்து உடலை பார்த்து உறுதி செய்து கதறி அழுதனர். இதுகுறித்து நர்சின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கூறுகையில், "ஊத்துக்குளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபிறகு போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக் கவில்லை. ஆனால், நர்சை பற்றி தவறாக விசாரித்தனர்.

போலீசார் உடனடியாக நடவ டிக்கை எடுத்திருந்தால் அவரை காப் பாற்றி இருக்க முடியும். நர்சை கொலை செய்த நபரை கண்டுபிடிக் கும் வரை உடலை வாங்க மாட்டோம்" என தெரிவித்தனர். கடந்த 14ம் தேதி வேலைக்குச் சென்ற நர்ஸ், மருத்துவ மனையில் இருந்து அன்று இரவு 7 மணிக்கு மேல் பணி முடிந்து வீட்டுக்குத் திரும்பியதாகவும், வழி யில் பழக்கடை ஒன்றுக்கு சென்றதா கவும் அதன்பிறகே காணாமல் போனதாகவும் கூறப்படுகிறது.

முதற்கட்ட விசாரணையில், நர்ஸ் கடத்தப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. மேலும், நர்ஸ் அணிந்திருந்த 3 பவுனில் நகை காணவில்லை. எனவே, நர்சை பலாத்காரம் செய்து கொலை செய்த வர் நகையையும் கொள்ளையடித்தி ருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகி றது. இதுகுறித்து போலீசார் விசா ரணை நடத்தி வருகின்றனர். காணா மல் போன நர்ஸ், 5 நாட்களுக்குப் பிறகு சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.